திருஅருட்பா ஐந்தாம் திருமுறை, பதிகம் எண் - 7, பதிகத்தின் பெயர் - அதிசய மாலை

ஆவாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அடியரெலாம் நினைந்துநினைந் தவிழ்ந்தகநெக் குருகி
ஓவாமல் அரற்றிடவும் அவர்க்கருளான் மாயை
உலகவிட யானந்தம் உவந்துவந்து முயன்று
தீவாய நரகினிடை விழக்கடவேன் எனைத்தான்
சிவயாநம எனப்புகலும் தெளிவுடையன் ஆக்கிச்
**சாவாத வரங்கொடுத்து**த் தனக்கடிமை பணித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே (3208)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 22, பதிகத்தின் பெயர் - நடராஜபதி மாலை

பூதமுத லாயபல கருவிகள் அனைத்தும்என்
புகல்வழிப் பணிகள்கேட்பப்
பொய்படாச் சத்திகள் அனந்தகோ டிகளும்மெய்ப்
பொருள்கண்ட சத்தர்பலரும்
ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்
கிசைந்தெடுத் துதவ**என்றும்**
**இறவாத பெருநிலையில்** இணைசொலா இன்புற்
றிருக்கஎனை வைத்தகுருவே
நாதமுதல் இருமூன்று வரையந்த நிலைகளும்
நலம்பெறச் சன்மார்க்கமாம்
ஞானநெறி ஓங்கஓர் திருவருட் செங்கோல்
நடத்திவரு நல்லஅரசே
வாதமிடு சமயமத வாதிகள் பெறற்கரிய
மாமதியின் அமுதநிறைவே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே (3673)

அந்நாளில் அம்பலத் திருவாயி லிடைஉனக்
கன்புடன் உரைத்தபடியே
அற்புதம்எ லாம்வல்ல நம்அருட் பேரொளி
அளித்தனம் மகிழ்ந்துன்உள்ளே
இந்நாள் தொடுத்துநீ எண்ணிய படிக்கே
இயற்றிவிளை யாடிமகிழ்க
**என்றும்இற வாநிலையில்** இன்பஅனு பவனாகி
இயல்சுத்த மாதிமூன்றும்
எந்நாளும் உன்இச்சை வழிபெற்று வாழ்கயாம்
எய்திநின் னுட்கலந்தேம்
இனிஎந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மைஈ
தெம்மாணை என்றகுருவே



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

மன்னாகி என்பெரிய வாழ்வாகி அழியாத
வரமாகி நின்றசிவமே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராஜபதியே (3680)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 23, பதிகத்தின் பெயர் - சற்குருமணி மாலை

தத்துவ மசிநிலை இதுஇது தானே
சத்தியம் காண்எனத் தனித்துரைத் தெனக்கே
எத்துவந் தனைகளும் நீக்கிமெய்ந் நிலைக்கே
ஏற்றி**நான் இறவாத இயல்அளித் தருளால்**
சித்துவந் துலகங்கள் எவற்றினும் ஆடச்
செய்வித்த பேரருட் சிவபரஞ் சுடரே
சத்துவ நெறிதரு வடல்அருட் கடலே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே (3692)

அமரரும் முனிவரும் அதிசயித் திடவே
அருட்பெருஞ் சோதியை அன்புடன் அளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றிஎன் றனையே
காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே
**எமன்எனும் அவன்இனி இலைஇலை** மகனே
எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே
சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே (3702)

நன்மார்க்கத் தவர்உளம் நண்ணிய வரமே
நடுவெளி நடுநின்று நடஞ்செயும் பரமே
துன்மார்க்க வாதிகள் பெறற்கரு நிலையே
சுத்தசி வானந்தப் புத்தமு துவப்பே
என்மார்க்கம் எனக்களித் தெனையுமேல் ஏற்றி
**இறவாத பெருநலம் ஈந்தமெய்ப் பொருளே**
சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே (3703)

கருதாமல் கருதும்ஓர் கருத்தினுட் கருத்தே
காணாமல் காணும்ஓர் காட்சியின் விளைவே
எருதாகத் திரிந்தேனுக் கிகபரம் அளித்தே
**இறவாத வரமுந்தந் தருளிய ஒளியே**
வருதாகந் தவிர்த்திட வந்ததெள் ளமுதே
மாணிக்க மலைநடு மருவிய பரமே
தருதான முணவெனச் சாற்றிய பதியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே (3708)



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

ஏகாஅ னேகாஎன் றேத்திடு மறைக்கே
எட்டாத நிலையேநான் எட்டிய மலையே
ஓகாள மதங்களை முழுவதும் மாற்றி
ஒருநிலை ஆக்கஎன் றுரைத்தமெய்ப் பரமே
ஈகாதல் உடையவர்க் கிருநிதி அளித்தே
இன்புறப் புரிகின்ற இயல்புடை இறையே
**சாகாத வரந்தந்திங் கெனைக்காத்த அரசே**
தனிநட ராஜஎன் சற்குரு மணியே (3709)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 27, பதிகத்தின் பெயர் - திருவருள் விழைதல்

விரைந்துநின் அருளை ஈந்திடல் வேண்டும்
விளம்பும்இத் தருணம்என் உளந்தான்
கரைந்தது காதல் பெருகிமேல் பொங்கிக்
கரைஎலாம் கடந்தது கண்டாய்
வரைந்தெனை மணந்த வள்ளலே எல்லாம்
வல்லவா அம்பல வாணா
**திரைந்தஎன் உடம்பைத் திருஉடம் பாக்கித்**
**திகழ்வித்த சித்தனே** சிவனே (3755)

சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்பும்
தெய்வம்ஒன் றேஎனும் திறமும்
நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
நன்மையும் நரைதிரை முதலாம்
துவந்துவம் தவிர்த்துச் **சுத்தமா தியமுச்**
**சுகவடி வம்பெறும் பேறும்**
தவந்திகழ் எல்லாம் வல்லசித் தியும்நீ
தந்தருள் தருணம்ஈ தெனக்கே (3756)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 36, பதிகத்தின் பெயர் - பெற்ற பேற்றினை வியத்தல்

களித்தென துடம்பில் புகுந்தனை எனது
கருத்திலே அமர்ந்தனை கனிந்தே
தெளித்தஎன் அறிவில் விளங்கினை உயிரில்
சிறப்பினால் கலந்தனை உள்ளம்
தளிர்த்திடச் **சாகா வரங்கொடுத் தென்றும்**
**தடைபடாச் சித்திகள் எல்லாம்**
**அளித்தனை** எனக்கே நின்பெருங் கருணை
அடியன்மேல் வைத்தவா றென்னே (3748)


This e-book can be downloaded for free from http://www.vallalar.org

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 37, பதிகத்தின் பெயர் - அழிவுறா அருள்வடிவப் பேறு

சிவங்க னிந்தசிற் றம்பலத் தருள்நடம் செய்கின்ற பெருவாழ்வே
நவங்க னிந்தமேல் நிலைநடு விளங்கிய நண்பனே அடியேன்றன்
தவங்க னிந்தஓர் விண்ணப்பம் திருச்செவி தரித்தருள் புரிந்தாயே
**பவங்க னிந்தஇவ் வடிவமே அழிவுறாப் பதிவடி வாமாறே** (3852)

விளங்கு கின்றசிற் றம்பலத் தருள்நடம் விளைக்கின்ற பெருவாழ்வே
களங்க மில்லதோர் உளநடு விளங்கிய கருத்தனே அடியேன்நான்
விளம்பி நின்றதோர் விண்ணப்பம் திருச்செவி வியந்தருள் புரிந்தாயே
**உளங்கொள் இவ்வடி விம்மையே மந்திர ஒளிவடி வாமாறே** (3853)

விஞ்சு கின்றசிற் றம்பலத் தருள்நடம் விளைக்கின்ற பெருவாழ்வே
எஞ்சல் அற்றமா மறைமுடி விளங்கிய என்னுயிர்த் துணையேநான்
அஞ்சல் இன்றியே செய்தவிண் ணப்பம்ஏற் றகங்களித் தளித்தாயே
**துஞ்சும் இவ்வுடல் அழிவுறா தோங்குமெய்ச் சுகவடி வாமாறே** (3854)

ஓங்கு கின்றசிற் றம்பலத் தருள்நடம் ஒளிர்கின்ற பெருவாழ்வே
தேங்கு லாவிய தெள்ளமு தேபெருஞ் செல்வமே சிவமேநின்
பாங்க னேன்மொழி விண்ணப்பம் திருச்செவி பதித்தருள் புரிந்தாயே
**ஈங்கு வீழுடல் என்றும்வீ ழாதொளிர் இயல்வடி வாமாறே** (3855)

இலங்கு கின்றசிற் றம்பலத் தருள்நடம் இடுகின்ற பெருவாழ்வே
துலங்கு பேரருட் சோதியே சோதியுள் துலங்கிய பொருளேஎன்
புலங்கொள் விண்ணப்பம் திருச்செவிக் கேற்றருள் புரிந்தனை இஞ்ஞான்றே
**அலங்கும் இவ்வுடல் எற்றையும் அழிவுறா அருள்வடி வாமாறே** (3856)

சிறந்த பேரொளித் திருச்சிற்றம் பலத்திலே திகழ்கின்ற பெருவாழ்வே
துறந்த பேருளத் தருட்பெருஞ் சோதியே சுகப்பெரு நிலையேநான்
மறந்தி டாதுசெய் விண்ணப்பம் திருச்செவி மடுத்தருள் புரிந்தாயே
**பிறந்த இவ்வுடல் என்றும்இங் கழிவுறாப் பெருமைபெற் றிடுமாறே** (3857)

வயங்கு கின்றசிற் றம்பலந் தன்னிலே வளர்கின்ற பெருவாழ்வே
மயங்கு றாதமெய் அறிவிலே விளங்கிய மாமணி விளக்கேஇங்
கியங்கு சிற்றடி யேன்மொழி விண்ணப்பம் ஏற்றருள் புரிந்தாயே
**தயங்கும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாத் தனிவடி வாமாறே** (3858)

தீட்டு கின்றசிற் றம்பலந் தன்னிலே திகழ்கின்ற பெருவாழ்வே
காட்டு கின்றதோர் கதிர்நடு விளங்கிய கடவுளே அடியேன்நான்
நீட்டி நின்றதோர் விண்ணப்பம் திருச்செவி நிறைத்தருள் புரிந்தாயே
**பூட்டும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே** (3859)

தடையி லாதசிற் றம்பலந் தன்னிலே தழைக்கின்ற பெருவாழ்வே
கடையி லாப்பெருங் கதிர்நடு விளங்கும்ஓர் கடவுளே அடியேன்நான்
இடைவு றாதுசெய் விண்ணப்பம் திருச்செவிக் கேற்றருள் புரிந்தாயே
**புடையின் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே** (3860)



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

கையின் நெல்லிபோல் விளங்குசிற் றம்பலங் கலந்தருள் பெருவாழ்வே
மெய்யி லேவிளைந் தோங்கிய போகமே மெய்ப்பெரும் பொருளேநான்
ஐய மற்றுரைத் திட்டவிண் ணப்பம்ஏற் றளித்தனை இஞ்ஞான்றே
**செய்யும் இவ்வுடல் என்றுமிங் கழிவுறாச் சிவவடி வாமாறே** (3861)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 38, பதிகத்தின் பெயர் - பேரருள் வாய்மையை வியத்தல்

வாதித்த மாயை வினையா ணவம்எனும் வன்மலத்தைச்
சேதித்தென் உள்ளம் திருக்கோயி லாக்கொண்டு சித்திஎலாம்
போதித் **துடம்பையும் பொன்னுடம் பாக்கி**நற் புத்தமுதும்
சாதித் தருளிய நின்னருட் கியான்செயத் தக்கதென்னே (3866)

செத்தார் எழுகெனச் சிந்தைசெய் முன்னஞ் சிரித்தெழவே
இத்தா ரணியில் அருட்பெருஞ் சோதி எனக்களித்தாய்
**எத்தாலும் என்றும் அழியா வடிவுதந் தென்னுள்நின்னை**
**வைத்தாய்** மணிமன்ற வாணநின் பேரருள் வாய்மையென்னே (3867)

என்னேஎன் மீதெம் பெருமான் கருணை இருந்தவண்ணம்
தன்னே ரிலாத அருட்பெருஞ் சோதியைத் தந்துலகுக்
கன்னே எனவிளை யாடுக **என்றழி யாதசெழும்**
**பொன்னேர் வடிவும் அளித்தென் னுயிரில் புணர்ந்தனனே** (3869)

அச்சோ என்என்று புகல்வேன்என் ஆண்டவன் அம்பலத்தான்
எச்சோ தனையும் இயற்றாதென் னுட்கலந் தின்னருளாம்
மெய்ச்சோதி ஈந்தெனை மேனிலைக் கேற்றி **விரைந்துடம்பை**
**இச்சோதி ஆக்கிஅழியா நலந்தந்த விச்சையையே** (3870)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 40, பதிகத்தின் பெயர் - ஆனந்தானுபவம்

காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்
சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் - ஞாலமிசைச்
**சாகா வரம்பெற்றேன்** தத்துவத்தின் மேல்நடிக்கும்
ஏகா நினக்கடிமை ஏற்று (3893)

கண்டேன் களித்தேன் கருணைத் திருஅமுதம்
உண்டேன் உயர்நிலைமேல் ஓங்குகின்றேன் - **கொண்டேன்**
**அழியாத் திருஉருவம்** அச்சோஎஞ் ஞான்றும்
அழியாச்சிற் றம்பலத்தே யான் (3896)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 41, பதிகத்தின் பெயர் - பரசிவ நிலை

**சாகாத வரம்எனக்கே தந்ததனித் தெய்வம்**
    சன்மார்க்க சபையில்எனைத் தனிக்கவைத்த தெய்வம்
மாகாத லால்எனக்கு வாய்த்தஒரு தெய்வம்
    மாதவரா தியர்எல்லாம் வாழ்த்துகின்ற தெய்வம்



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

ஏகாத நிலைஅதன்மேல் எனைஏற்றும் தெய்வம்
எண்ணுதொறும் என்னுளத்தே இனிக்கின்ற தெய்வம்
தேகாதி உலகமெலாஞ் செயப்பணித்த தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் (3910)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 49, பதிகத்தின் பெயர் - கண்டேன் கனிந்தேன் கலந்தேன் எனல்

**மருள்நெறிசேர் மலஉடம்பை அழியாத விமல**
**வடிவாக்கி** எல்லாஞ்செய் வல்லசித்தாம் பொருளைத்
தருணமது தெரிந்தெனக்குத் தானேவந் தளித்த
தயாநிதியை எனைஈன்ற தந்தையைஎன் தாயைப்
பொருள்நிறைசிற் றம்பலத்தே விளங்குகின்ற பதியைப்
புகல்அரிதாம் சுத்தசிவ பூரணமெய்ச் சுகத்தைக்
கருணைஅருட் பெருஞ்சோதிக் கடவுளைஎன் கண்ணால்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே (4013)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 50, பதிகத்தின் பெயர் - ஆண்டருளிய அருமையை வியத்தல்

அன்பிலே பழுத்த தனிப்பழம் என்கோ
அறிவிலே அறிவறி வென்கோ
இன்பிலே நிறைந்த சிவபதம் என்கோ
என்னுயிர்த் துணைப்பதி என்கோ
வன்பிலா மனத்தே வயங்கொளி என்கோ
மன்னும்அம் பலத்தர சென்கோ
**என்புரி அழியாப் பொன்புரி ஆக்கி**
என்னைஆண் டருளிய நினையே (4020)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 52, பதிகத்தின் பெயர் - பாமாலை ஏற்றல்

ஆக்கி அளித்தல்முத லாந்தொழில்ஓர் ஐந்தினையும்
தேக்கி அமுதொருநீ செய்என்றான் - தூக்கி
எடுத்தான் அணைத்தான் **இறவாத தேகம்**
**கொடுத்தான்**சிற் றம்பலத்தென் கோ (4045)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 57, பதிகத்தின் பெயர் - அருள்விளக்க மாலை

கரைந்துவிடா தென்னுடைய நாவகத்தே இருந்து
கனத்தசுவை தருகின்ற கற்கண்டே கனிவாய்
விரைந்துவந்தென் துன்பமெலாம் தவிர்த்தஅரு ளமுதே
மெய்அருளே மெய்யாகி விளங்குகின்ற விளக்கே
**திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித்**
**திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே**
வரைந்தென்னை மணம்புரிந்து பொதுநடஞ்செய் அரசே
மகிழ்வொடுநான் புனைந்திடுஞ்சொன் மாலைஅணிந் தருளே (4096)



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

சாகாத கல்வியிலே தலையான நிலையே
சலியாத காற்றிடைநின் றொலியாத கனலே
ஏகாத புனலிடத்தே இடியாத புவியே
ஏசாத மந்திரத்தே பேசாத பொருளே
**கூகாஎன் றெனைக்கூடி எடுக்காதே என்றும்**
**குலையாத வடிவெனக்கே கொடுத்ததனி அமுதே**
மாகாதல் உடையார்கள் வழுத்தமணிப் பொதுவில்
மாநடஞ்செய் அரசேஎன் மாலையும்ஏற் றருளே (4145)

குணமறியேன் செய்தபெருங் குற்றமெலாங் குணமாக்
கொண்டருளி என்னுடைய குறிப்பெல்லாம் முடித்து
மணமுறுபே ரருள்இன்ப அமுதமெனக் களித்து
மணிமுடியும் சூட்டிஎனை வாழ்கஎன வாழ்த்தித்
**தணவிலிலா தென்னுளத்தே தான்கலந்து நானும்**
**தானும்ஒரு வடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே**
அணவுறுபேர் அருட்சோதி அரசுகொடுத் தருளி
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே (4188)

தலைகால்இங் கறியாதே திரிந்தசிறி யேனைத்
தான்வலிந்தாட் கொண்டருளித் தடைமுழுதுந் தவிர்த்தே
மலைவறுமெய் அறிவளித்தே அருளமுதம் அருத்தி
வல்லபசத் திகளெல்லாம் மருவியிடப் புரிந்து
நிலையுறவே **தானும்அடி யேனும்ஒரு வடிவாய்**
நிறையநிறை வித்துயர்ந்த நிலையதன்மேல் அமர்த்தி
அலர்தலைப்பேர் அருட்சோதி அரசுகொடுத் தருளி
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே (4189)

**மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும்**
**வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்**
பன்னுகின்ற தொழில்ஐந்துஞ்செய்திடவே பணித்துப்
பண்புறஎன் அகம்புறமும் விளங்குகின்ற பதியே
உன்னுகின்ற தோறும்எனக் குள்ளமெலாம் இனித்தே
ஊறுகின்ற தெள்ளமுதே ஒருதனிப்பே ரொளியே
மின்னுகின்ற மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யும்அணிந் தருள்வோய்என் பொய்யும்அணிந் தருளே (4150)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 68, பதிகத்தின் பெயர் - ஆடிய பாதம்

**சாகா வரந்தந்த தாரகப் பாதம்**
சச்சிதா னந்த சதோதய பாதம்
தேகாதி எல்லாம் சிருட்டிக்கும் பாதம்
திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம் ஆடிய (4328)



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

எண்ணிய வாறே எனக்கருள் பாதம்
**இறவா நிலையில் இருத்திய பாதம்**
புண்ணியர் கையுள் பொருளாகும் பாதம்
பொய்யர் உளத்தில் பொருந்தாத பாதம் ஆடிய (4333)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 70, பதிகத்தின் பெயர் - அம்பலவாணர் வருகை

**ஊக மிலேன்பெற்ற தேகம் அழியாத**
**யோகம் கொடுத்தீரே வாரீர்**
போகம் கொடுத்தீரே வாரீர் வாரீர் (4413)

**ஓமத்தி லேநடுச் சாமத்தி லேஎனை**
**ஓமத்தன் ஆக்கினீர் வாரீர்**
சாமத்த நீக்கினீர் வாரீர் வாரீர் (4452)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 71, பதிகத்தின் பெயர் - அம்பலவாணர் ஆடவருகை

சன்மார்க்க நெறிவைத்தீர் ஆடவா ரீர்
**சாகாத வரந்தந்தீர் ஆடவா ரீர்**
கன்மார்க்க மனங்கரைத்தீர் ஆடவா ரீர்
கண்ணிசைந்த கணவரேநீர் ஆடவா ரீர்
சொன்மார்க்கப் பொருளானீர் ஆடவா ரீர்
சுத்தஅருட் சோதியரே ஆடவா ரீர்
என்மார்க்கம் உளத்துகந்தீர் ஆடவா ரீர்
என்னுடைய நாயகரே ஆடவா ரீர் ஆடவா ரீர் (4464)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 77, பதிகத்தின் பெயர் - ஆனந்தப் பரிவு

பொதுவாகிப் பொதுவில்நடம் புரிகின்ற பேரின்பப் பொருள்தான் யாதோ
**அதுநானாய் நான்அதுவாய் அத்துவிதம் ஆகின்றேன் அந்தோ அந்தோ** (4515)

மருள்வடிவே எஞ்ஞான்றும் எவ்விடத்தும் **எதனாலு மாய்வி லாத**
**அருள்வடிவாய் இம்மையிலே அடைந்திடப்பெற் றாடுகின்றேன் அந்தோ அந்தோ** (4516)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 78, பதிகத்தின் பெயர் - ஞான மருந்து

தன்னை அளித்த மருந்து - என்றும்
**சாகாத நல்வரம் தந்த மருந்து**
பொன்னடி ஈந்த மருந்து - அருட்
போனகம் தந்த புனித மருந்து ஞான (4543)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 79, பதிகத்தின் பெயர் - சிவசிவ ஜோதி

ஏகாந்த மாகிய ஜோதி - என்னுள்
என்றும் பிரியா திருக்கின்ற ஜோதி


This e-book can be downloaded for free from http://www.vallalar.org

**சாகாத வரந்தந்த ஜோதி** - என்னைத்
தானாக்கிக் கொண்டதோர் சத்திய ஜோதி சிவசிவ (4583)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 81, பதிகத்தின் பெயர் - அருட்பெருஞ்ஜோதி அகவல்

**என்னையும் பணிகொண் டிறவா வரமளித்**
**தன்னையி லுவந்த வருட்பெருஞ் ஜோதி** (4615 Line No 125)

**இறவா வரமளித் தென்னைமே லேற்றிய**
**அறவாழி யாந்தனி யருட்பெருஞ் ஜோதி** (4615 Line No 157)

**ஓமயத் திருவுரு வுவப்புட னளித்தெனக்**
**காமயத் தடைதவி ரருட்பெருஞ் ஜோதி** (4615 Line No 189-190)

**சாமா றனைத்துந் தவிர்த்திங் கெனக்கே**
**ஆமா றருளிய வருட்பெருஞ் ஜோதி** (4615 Line No 204)

**சாவா நிலையிது தந்தன முனக்கே**
**ஆவா வெனவரு ளருட்பெருஞ் ஜோதி** (4615 Line No 210)

**இன்னரு ளமுதளித் திறவாத் திறல்புரிந்**
**தென்னை வளர்த்திடு மின்புடைத் தாயே** (4615 Line No 1105)

**சாகாக் கல்வியின் றரமெலா முணர்த்திச்**
**சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்** (4615 Line No 1568)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 83, பதிகத்தின் பெயர் - இறை இன்பக் குழைவு

தானே தயவால் சிறியேற்குத் தனித்த ஞான அமுதளித்த
தாயே எல்லாச் சுதந்தரமும் தந்த கருணை எந்தாயே
ஊனே விளங்க ஊனமிலா ஒளிபெற் றெல்லா உலகமும்என்
உடைமை யாக்கொண் டருள்நிலைமேல் உற்றேன் உன்றன் அருளாலே
**வானே மதிக்கச் சாகாத வரனாய்** எல்லாம் வல்லசித்தே
வயங்க உனையுட் கலந்துகொண்டேன் வகுக்குந் தொழிலே முதலைந்தும்
நானே புரிகின் றேன்புரிதல் நானோ நீயோ நான்அறியேன்
நான்நீ என்னும் பேதம்இலா நடஞ்செய் கருணை நாயகனே (4627)

கலைசார் முடிபு கடந்துணர்வு கடந்து நிறைவாய்க் கரிசிலதாய்க்
கருணை மயமாய் விளங்குசிதா காய நடுவில் இயற்கையுண்மைத்
தலைசார் வடிவில் இன்பநடம் புரியும் பெருமைத் தனிமுதலே
சாகாக் கல்வி பயிற்றிஎன்னுட் சார்ந்து விளங்கும் சற்குருவே
புலைசார் மனத்துச் சிறியேன்றன் குற்றம் அனைத்தும் பொறுத்தருளிப்
**பொன்றா வடிவு கொடுத்தெல்லாம் புரிவல் லபந்தந் தருட்சோதி**



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

நிலைசார் இறைமை அளித்தனைநான் பொதுவில் ஞான நீதிஎனும்
நிருத்தம் புரிகின் றேன்புரிதல் நீயோ நானோ நிகழ்த்தாயே (4628)

ஓவா துண்டு படுத்துறங்கி உணர்ந்து விழித்துக் கதைபேசி
உடம்பு நோவா துளமடக்கா தோகோ நோன்பு கும்பிட்டே
**சாவா வரமும் சித்திஎலாம் தழைத்த நிலையும் சன்மார்க்க**
**சங்க மதிப்பும் பெற்றேன்**என் சதுர்தான் பெரிதென் சரித்திரத்தை
ஆவா நினைக்கில் அதிசயம்என் அப்பா அரசே அமுதேஎன்
ஆவிக் கினிய துணையேஎன் அன்பே அறிவே அருட்சோதித்
தேவா இதுநின் செயலேஇச் செயலை நினைக்குந் தொறும்எனது
சிந்தை கனிந்து கனிந்துருகித் தெள்ளா ரமுதம் ஆனதுவே (4631)

ஊற்றை உடம்பில் இருட்டறைவாய் உறங்கி விழித்துக் கதைபேசி
உண்டிங் குடுத்துக் கருத்திழந்தே உதவா எருதின் ஊர்திரிந்து
நேற்றை வரையும் வீண்போது போக்கி இருந்தேன் நெறிஅறியேன்
நேரேஇற்றைப் பகல்அந்தோ நெடுங்கா லமும்மெய்த் தவயோக
ஆற்றை அடைந்தோர் எல்லோரும் அச்சோ என்றே அதிசயிப்ப
**அமுதுண் டழியாத் திருஉருவம் அடைந்தேன்** பெரிய அருட்சோதிப்
பேற்றை உரிமைப் பேறாகப் பெற்றேன் பெரிய பெருமான்நின்
பெருமை இதுவேல் இதன் இயலை யாரே துணிந்து பேசுவரே (4633)

புரைசேர் வினையும் கொடுமாயைப் புணர்ப்பும் இருளும் மறைப்பினொடு
புகலும் பிறவாம் தடைகளெலாம் போக்கி ஞானப் பொருள்விளங்கும்
வரைசேர்த் தருளிச் சித்தியெலாம் வழங்கிச் **சாகா வரங்கொடுத்து**
வலிந்தென் உளத்தில் அமர்ந்துயிரில் கலந்து மகிழ்ந்து வாழ்கின்றாய்
பரைசேர் வெளியில் பதியாய்அப் பால்மேல் வெளியில் விளங்குசித்த
பதியே சிறியேன் பாடலுக்குப் பரிசு விரைந்தே பாலித்த
அரைசே அமுதம் எனக்களித்த அம்மே உண்மை அறிவளித்த
அப்பா பெரிய அருட்சோதி அப்பா வாழி நின்அருளே (4634)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 84, பதிகத்தின் பெயர் - பெறாப் பேறு

ஆவாஎன் றெனையாட்கொண் டருளியதெள் ளமுதே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
**சாவாத வரம்எனக்குத் தந்தபெருந் தகையே**
தயாநிதியே சிற்சபையில் தனித்தபெரும் பதியே
ஓவாதென் உள்ளகத்தே ஊற்றெழும்பே ரன்பே
உள்ளபடி என்னறிவில் உள்ளபெருஞ் சுகமே
நீவாஎன் மொழிகளெலாம் நிலைத்தபயன் பெறவே
நித்திரைதீர்ந் தேன்இரவு நீங்கிவிடிந் ததுவே (4635)

அச்சமெலாம் தவிர்த்தருளி இச்சைஎலாம் அளித்த
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
துச்சவுல காசாரத் துடுக்கனைத்தும் தவிர்த்தே



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

சுத்தநெறி வழங்குவித்த சித்தசிகா மணியே
உச்சநிலை நடுவிளங்கும் ஒருதலைமைப் பதியே
உலகமெலாம் எடுத்திடினும் உலவாத நிதியே
இச்சமயம் எழுந்தருளி **இறவாத வரமும்**
**எல்லாஞ்செய் வல்லசித்தின் இயற்கையுந்தந் தனையே** (4638)

அச்சமெலாம் தவிர்த்தருளி இச்சைஎலாம் அளித்த
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
துச்சவுல காசாரத் துடுக்கனைத்தும் தவிர்த்தே
சுத்தநெறி வழங்குவித்த சித்தசிகா மணியே
உச்சநிலை நடுவிளங்கும் ஒருதலைமைப் பதியே
உலகமெலாம் எடுத்திடினும் உலவாத நிதியே
**இச்சமயம் எழுந்தருளி இறவாத வரமும்**
**எல்லாஞ்செய் வல்லசித்தின் இயற்கையுந்தந் தனையே (4639)**

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 85, பதிகத்தின் பெயர் - சிவானந்தத் தழுந்தல்

**தேகம்எப் போதும் சிதையாத வண்ணம்**
**செய்வித் தெலாம்வல்ல சித்தியும் தந்தே**
போகம்எல் லாம்என்றன் போகம தாக்கிப்
போதாந்த நாட்டைப் புரக்கமேல் ஏற்றி
ஏகசி வானந்த வாழ்க்கையில் என்றும்
இன்புற்று வாழும் இயல்பளித் தென்னை
ஆகம வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே (4646)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 87, பதிகத்தின் பெயர் - அச்சோப் பத்து

எம்மையும்என் தனைப்பிரியா தென்னுளமே
இடங்கொண்ட இறைவன் தன்னை
**இம்மையில்என் தனக்கழியாத் திருவடிவம்**
**தந்தானை** எல்லாம் வல்ல
செம்மைதரு சித்தனைஎன் சிவபதியைத்
தெள்ளமுதத் திரளை என்றன்
அம்மையைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ (4671)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 88, பதிகத்தின் பெயர் - அனுபவ நிலை

நான்செய்த புண்ணியம் என்னுரைக் கேன்பொது நண்ணியதோர்
வான்செய்த மாமணி என்கையில் பெற்றுநல் வாழ்வடைந்தேன்
**ஊன்செய்த தேகம் ஒளிவடி வாகநின் றோங்குகின்றேன்**
தேன்செய்த தெள்ளமு துண்டேன்கண் டேன்மெய்த் திருநிலையே **(4675)**



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 89, பதிகத்தின் பெயர் - அருட்பெருஞ்சோதி அடைவு

உறவே எனதின் னுயிரேஎன் உள்ளத்தில் உற்றினிக்கும்
நறவே அருட்பெருஞ் சோதிமன் றோங்கு நடத்தரசே
**இறவேன் எனத்துணி வெய்திடச் செய்தனை** என்னைஇனி
மறவேல் அடிச்சிறி யேன்ஒரு போது மறக்கினுமே (4688)

மறப்பேன் அலேன்உன்னை ஓர்கண மேனும் மறக்கில்அன்றே
இறப்பேன் இதுசத் தியம்சத் தியம்சத் தியம்இசைத்தேன்
**பிறப்பே தவிர்த்தெனை ஆட்கொண் டமுதம் பெரிதளித்த**
**சிறப்பே** அருட்பெருஞ் சோதிமன் றோங்கு செழுஞ்சுடரே (4689)

வாழிஎன் றேஎனை மால்அயன் ஆதியர் வந்தருட்பேர்
ஆழிஎன் றேதுதித் தேத்தப் புரிந்தனை அற்புதம்**நீ**
**டூழிஅன் றேஎன்றும் சாகா வரமும் உவந்தளித்தாய்**
வாழிமன் றோங்கும் அருட்பெருஞ் சோதிநின் மன்னருளே (4694)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 90, பதிகத்தின் பெயர் - அடிமைப் பேறு

**கூகாஎனக் கூடி எடாதிக் கொடியனேற்கே**
**சாகாவரம் தந்த தயாநிதித் தந்தையே**நின்
மாகாதலன் ஆகினன் நான்இங்கு வாழ்கின்றேன்என்
யோகாதி சயங்கள் உரைக்க உலப்புறாதே (4707)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 91, பதிகத்தின் பெயர் - உலப்பில் இன்பம்

பொய்யேஉரைக் கின்றஎன் சொல்லும் புனைந்துகொண்டாய்
மெய்யேதிரு அம்பலத் தாடல்செய் வித்தகனே
எய்யேன்இனி வெம்மலக் கூட்டில் இருந்தென்உள்ளம்
நையேன்**சுத்த நல்லுடம் பெய்தினன் நானிலத்தே** (4715)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 93, பதிகத்தின் பெயர் - சிவபுண்ணியப் பேறு

உயத்திடம் அறியா திறந்தவர் தமைஇவ்
வுலகிலே உயிர்பெற்று மீட்டும்
நயத்தொடு வருவித் திடும்ஒரு ஞான
நாட்டமும் கற்பகோ டியினும்
வயத்தொடு **சாகா வரமும்என் தனக்கே**
**வழங்கிடப் பெற்றனன் மரண**
**பயத்தைவிட் டொழித்தேன்** எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே (4731)

கட்டமும் கழன்றேன் கவலைவிட் டொழித்தேன்
கலக்கமும் தீர்ந்தனன் **பிறவிச்**
**சட்டமும் கிழித்தேன்** தூக்கமும் துறந்தேன்
சாவையும் நோவையும் தவிர்ந்தேன்
சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான்


This e-book can be downloaded for free from http://www.vallalar.org

செல்வமெய்ப் பிள்ளைஎன் றொருபேர்ப்
பட்டமும் தரித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே (4736)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 94, பதிகத்தின் பெயர் - சிவானந்தப் பற்று

வரையற்ற சீர்ப்பெரு வாழ்வுதந் தென்மனம் மன்னிஎன்றும்
புரையற்ற மெய்ந்நிலை ஏற்றிமெய்ஞ் ஞானப் பொதுவினிடைத்
திரையற்ற காட்சி அளித்தின் னமுதத் தெளிவருளி
**நரையற்று மூப்பற் றிறப்பற் றிருக்கவும் நல்கியதே** (4740)

கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் **சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்**
**பெற்றேன்** உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே (4745)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 95, பதிகத்தின் பெயர் - இறை எளிமையை வியத்தல்

பொதுநடஞ்செய் மலரடிஎன் தலைமேலே அமைத்தீர்
புத்தமுதம் அளித்தீர்என் புன்மைஎலாம் பொறுத்தீர்
சதுமறைஆ கமங்கள்எலாம் சாற்றரிய பெரிய
தனித்தலைமைத் தந்தையரே **சாகாத வரமும்**
**எதுநினைத்தேன் நினைத்தாங்கே அதுபுரியும் திறமும்**
**இன்பஅனு பவநிலையும் எனக்கருளு வதற்கே**
**இதுதருணம் என்றேன்நான் என்பதன்முன் கொடுத்தீர்**
என்புகல்வேன் என்புடைநும் அன்பிருந்த வாறே (4754)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 98, பதிகத்தின் பெயர் - அருட்கொடைப் புகழ்ச்சி

புலந்த மனத்தை அடக்கிஒரு போது நினைக்க மாட்டாதே
அலந்த சிறியேன் பிழைபொறுத்தே அருளா ரமுதம் அளித்திங்கே
**உலந்த உடம்பை அழியாத உடம்பாப் புரிந்தென் உயிரினுளே**
**கலந்த பதியே** நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே (4789)

பெண்ணே பொருளே எனச்சுழன்ற பேதை மனத்தால் பெரிதுழன்ற
புண்ணே எனும்இப் புலைஉடம்பில் புகுந்து திரிந்த புலையேற்குத்
**தண்ணேர் மதியின் அமுதளித்துச் சாகா வரந்தந் தாட்கொண்ட**
**கண்ணே மணியே** நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே (4791)

போதல் ஒழியா மனக்குரங்கின் போக்கை அடக்கத் தெரியாது
நோதல் புரிந்த சிறியேனுக் கிரங்கிக் கருணை நோக்களித்துச்
**சாதல் எனும்ஓர் சங்கடத்தைத் தவிர்த்தென் உயிரில் தான்கலந்த**
**காதல் அரசே** நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே (4796)



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 100, பதிகத்தின் பெயர் - அனுபவ சித்தி

எனையான் மதித்துப் புகல்கின்ற தன்றிஃ தெந்தைபிரான்
தனையான் மதித்திங்குப் பெற்றநல் வாழ்வது சாற்றுகின்றேன்
வினையான் மெலிந்த மெலிவைஎல் லாம்விரைந் தேதவிர்த்துத்
தனையான் புணர்ந்திடச் **சாகா வரத்தையும் தந்தனனே** (4815)

ஒன்றுகண் டேன்திரு அம்பலத் தேஒளி ஓங்குகின்ற
நன்றுகண் டேன்உல கெல்லாம் தழைக்க நடம்புரிதல்
இன்றுகண் டேன்**என்றும் சாகா வரத்தை எனக்கருள**
**மன்றுகண் டார்க்கிந்த வாழ்வுள தென்று மகிழ்ந்தனனே** (4817)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 101, பதிகத்தின் பெயர் - பொன்வடிவப் பேறு

**ஊன உடம்பே ஒளிஉடம்பாய் ஓங்கிநிற்க**
**ஞான அமுதெனக்கு நல்கியதே** - வானப்
பொருட்பெருஞ் சோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் சோதி அது (4823)

**ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்**
**சாதல் ஒழித்தென்னைத் தானாக்கிப்** - பூதலத்தில்
ஐந்தொழில்செய் என்றே அருட்சோதிக் கோலளித்தான்
வெந்தொழில்போய் நீங்க விரைந்து (4828)

தூக்கம் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே
ஆக்கமென ஓங்கும்பொன் அம்பலத்தான் - ஏக்கமெலாம்
நீங்கினேன் எண்ணம் நிரம்பினேன் **பொன்வடிவம்**
**தாங்கினேன் சத்தியமாத் தான்** (4832)

துன்பம் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே
அன்பகத்தில் வாழும்சிற் றம்பலத்தான் - இன்புருவம்
தாங்கினேன் **சாகாத் தனிவடிவம் பெற்றொளியால்**
**ஓங்கினேன்** உண்மை உரை (4833)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 107, பதிகத்தின் பெயர் - திரு உந்தியார்

தந்தையைக் கண்டேன்**நான் சாகா வரம்பெற்றேன்**
சிந்தை களித்தேன்என்று உந்தீபற
சித்தெலாம் வல்லேன்என்று உந்தீபற (4903)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 108, பதிகத்தின் பெயர் - அருள் அற்புதம்

செத்தார் எழுகின்ற திருநாள் அடுத்தது
சிவநெறி ஒன்றே எங்கும்தலை எடுத்தது



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

இத்தா ரணிமுதல் வானும் உடுத்தது
**இறவா வரந்தான் எனக்குக் கொடுத்தது** அற்புதம் (4907)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 111, பதிகத்தின் பெயர் - பந்தாடல்

இசையாமல் போனவர் எல்லாரும் நாண
**இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்**
வசையாதும் இல்லாத மேற்றிசை நோக்கி
வந்தேன்என் தோழிநீ வாழிகாண் வேறு
நசையாதே என்னுடை நண்பது வேண்டில்
நன்மார்க்க மாம்சுத்த சன்மார்க்கம் தன்னில்
அசையாமல் நின்றங்கே ஆடேடி பந்து
அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து ஆடேடி (4953)

இன்பாலே உலகத்தார் எல்லாரும் காண
**இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்**
தென்பாலே நோக்கினேன் சித்தாடு கின்ற
திருநாள் இதுதொட்டுச் சேர்ந்தது தோழி
துன்பாலே அசைந்தது நீக்கிஎன் னோடே
சுத்தசன் மார்க்கத்தில் ஒத்தவ ளாகி
அன்பாலே அறிவாலே ஆடேடி பந்து
அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து ஆடேடி (4954)

தப்பாலே சகத்தவர் சாவே துணிந்தார்
தாமுளம் நாண**நான் சாதலைத் தவிர்த்தே**
**எப்பாலும் எக்காலும் இருத்தலே பெற்றேன்**
என்தோழி வாழிநீ என்னொடு கூடி
துப்பாலே விளங்கிய சுத்தசன் மார்க்கச்
சோதிஎன் றோதிய வீதியை விட்டே
அப்பாலே போகாமல் ஆடேடி பந்து
அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து ஆடேடி (4956)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 112, பதிகத்தின் பெயர் - மெய்யருள் வியப்பு

வல்லாய் உனது கருணை அமுதென் வாய்க்கு வந்த தே
மலமும் மாயைக் குலமும் வினையும் முழுதும் வெந்த தே
எல்லா நலமும் ஆன அதனை உண்டு வந்த தே
**இறவா தென்றும் ஓங்கும் வடிவம் எனக்கு வந்த தே** (5032)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 122, பதிகத்தின் பெயர் - ஊதூது சங்கே

என்உயிர் காத்தான்என்று ஊதூது சங்கே
இன்பம் பலித்ததென்று ஊதூது சங்கே


This e-book can be downloaded for free from http://www.vallalar.org

**பொன்உருத் தந்தான்என்று ஊதூது சங்கே**
பொற்சபை அப்பன்என்று ஊதூது சங்கே (5273)

**இறவாமை ஈந்தான்என்று ஊதூது சங்கே**
எண்ணம் பலித்ததென்று ஊதூது சங்கே
திறமே அளித்தான்என்று ஊதூது சங்கே
சிற்றம் பலத்தான்என்று ஊதூது சங்கே (5278)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 125, பதிகத்தின் பெயர் - தனித் திருஅலங்கல்

முன்னாள்செய் புண்ணியம் யாதோ உலகம் முழுதும்என்பால்
இந்நாள் அடைந்தின்பம் எய்திட ஓங்கினன் எண்ணியவா
றெந்நாளும் **இவ்வுடம் பேஇற வாத இயற்கைபெற்றேன்**
என்னாசை அப்பனைக் கண்டுகொண் டேன்என் இதயத்திலே (5412)

தனித்துணையாய் என்றன்னைத் தாங்கிக்கொண் டென்றன்
**மனித்த உடம்பழியா வாறே** - கனித்துணையாம்
இன்னமுதம் தந்தெனக்கே எல்லாமும் வல்லசித்தி
தன்னையுந்தந் துட்கலந்தான் றான் (5392)

நான்செய்த புண்ணியம் என்னுரைக் கேன்பொது நண்ணியதோர்
வான்செய்த மாமணி என்கையில் பெற்றுநல் வாழ்வடைந்தேன்
**ஊன்செய்த தேகம் ஒளிவடி வாகநின் றோங்குகின்றேன்**
கோன்செய்த விச்சை குணிக்கவல் லார்எவர் கூறுமினே (5397)

**பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்**
**சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால்**
**நித்திய மாகியே நிகழும் என்பது**
**சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே** (5402)

செத்தார் எழுந்தனர் சுத்தசன் மார்க்கம் சிறந்ததுநான்
ஒத்தார் உயர்ந்தவர் இல்லா ஒருவனை உற்றடைந்தே
சித்தாடு கின்றனன் **சாகா வரமும் சிறக்கப்பெற்றேன்**
இத்தா ரணியில் எனக்கிணை யார்என் றியம்புவனே (5417)

உரையும் உற்றது ஒளியும் உற்றது உணர்வும் உற்றது உண்மையே
பரையும் உற்றது பதியும் உற்றது பதமும் உற்றது பற்றியே
புரையும் அற்றது குறையும் அற்றது புலையும் அற்றது புன்மைசேர்
**திரையும் அற்றது நரையும் அற்றது திரையும் அற்றவி ழுந்ததே** (5435)

காற்றாலே புவியாலே ககனமத னாலே
    கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
    கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

வேற்றாலே எஞ்ஞான்றும் **அழியாதே விளங்கும்**
**மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே**
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே (5450)

தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்
டேக்கமும் வினையும் மாயையும் இருளும்
இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும்மெய் அன்பும்
**அழிவுறா உடம்பும்மெய் இன்ப**
**ஊக்கமும் எனையே உற்றன** உலகீர்
உண்மைஇவ் வாசகம் உணர்மின் (5455)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 128, பதிகத்தின் பெயர் - உற்ற துரைத்தல்

விரைந்து விரைந்து படிகடந்தேன் மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம்உருகக் கண்ர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மணம்பொங்க மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
**திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும் செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே** (5482)

**பெற்றேன் என்றும் இறவாமை பேதம் தவிர்ந்தே இறைவன்எனை**
**உற்றே கலந்தான் நானவனை உற்றே கலந்தேன் ஒன்றானேம்**
எற்றே அடியேன் செய்ததவம் யாரே புரிந்தார் இன்னமுதம்
துற்றே உலகீர் நீவிர்எலாம் வாழ்க வாழ்க துனிஅற்றே (5486)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் -129, பதிகத்தின் பெயர் - சுத்த சிவநிலை

சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும்**ஓர்**
**ஞான வடிவுமிங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்**
**தானவிளை யாட்டியற்றத் தான்** (5503)

**கூகா எனஅடுத்தோர் கூடி அழாதவண்ணம்**
**சாகா வரம்எனக்கே தந்திட்டான்** - ஏகாஅன்
ஏகா எனமறைகள் ஏத்துஞ்சிற் றம்பலத்தான்
மாகா தலனா மகிழ்ந்து (5510)

நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சித்தி நாடடைந்தேன் - **நானே**
**அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்**
**இழியாமல் ஆடுகின்றேன் இங்கு** (5513)



This e-book can be downloaded for free from http://www.vallalar.org

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 136, பதிகத்தின் பெயர் - சன்மார்க்க உலகின் ஒருமைநிலை

நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரும் **எஞ்ஞான்றும்**
**சாவா வரம்எனைப்போல் சார்ந்தவரும்** - தேவாநின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யார்உளர்நீ சற்றே அறை (5624)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 139, பதிகத்தின் பெயர் - நற்றாய் செவிலிக்குக் கூறல்

வள்ளலைப் புணர்ந்தேன் அம்மவோ இதுதான்
மாலையோ காலையோ என்றாள்
எள்ளலைத் தவிர்ந்தேன் உலகெலாம் எனக்கே
ஏவல்செய் கின்றன என்றாள்
**தெள்ளமு தருந்தி அழிவிலா உடம்பும்**
**சித்தியும் பெற்றனன் என்றாள்**
துள்ளிய மடவீர் காண்மினோ என்றாள்
சோர்விலாள் நான்பெற்ற சுதையே (5685)

வாழிமா மணிமன் றிறைவனே எனக்கு
மாலைவந் தணிந்தனன் என்றாள்
**ஊழிதோ றூழி உலவினும் அழியா**
**உடம்பெனக் களித்தனன் என்றாள்**
ஆழிசூழ் உலகோ டண்டங்கள் அனைத்தும்
அளிக்கஎன் றருளினான் என்றாள்
ஏழியன் மாட மிசையுற வைத்தான்
என்றனள் எனதுமெல் லியலே (5688)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 142, பதிகத்தின் பெயர் - அனுபவ மாலை

காணாத காட்சியெலாம் காண்கின்றேன் பொதுவில்
கருணைநடம் புரிகின்ற கணவரைஉட் கலந்தேன்
கோணாத மேல்நிலைமேல் இன்பஅனு பவத்தில்
குறையாத வாழ்வடைந்தேன் தாழ்வனைத்தும் தவிர்ந்தேன்
நாணாளும் திருப்பொதுவில் நடம்பாடிப் பாடி
நயக்கின்றேன் நற்றவரும் வியக்கின்ற படியே
**மாணாகம் பொன்ஆகம் ஆகவரம் பெற்றேன்**
வள்ளல்அருள் நோக்கடைந்தேன் கண்டாய்என் தோழி (5804)

சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும்
தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந்தேன்
உரியசிவ ஞானநிலை நான்கும்அருள் ஒளியால்
ஒன்றொன்றா அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்
அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்
ஆறந்த நிலைஅறிந்தேன் அப்பால்நின் றோங்கும்


This e-book can be downloaded for free from http://www.vallalar.org

பெரியசிவ அனுபவத்தால் **சமரசசன் மார்க்கம்**
**பெற்றேன்இங் கிறவாமை உற்றேன்காண் தோழி** (5806)

நான்பசித்த போதெல்லாம் தான்பசித்தார் ஆகி
நல்லதிரு அமுதளித்தே அல்லல்பசி தவிர்த்தே
ஊன்பதித்த என்னுடைய உளத்தேதம் முடைய
உபயபதம் பதித்தருளி அபயம்எனக் களித்தார்
வான்பதிக்கும் கிடைப்பரியார் சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த புறப்புணர்ச்சித் தருணம்
**தான்பதித்த பொன்வடிவம் தனைஅடைந்து களித்தேன்**
சாற்றும்அகப் புணர்ச்சியின்ஆம் ஏற்றம் உரைப் பதுவே (5807)

தாயினும்பே ரருளுடையார் என்னுயிரில் கலந்த
தனித்தலைவர் நான்செய்தபெருந் தவத்தாலே கிடைத்தார்
வாயினும்ஓர் மனத்தினும்மா மதியினும்எத் திறத்தும்
மதித்தளத்தற் கருந்துரிய மன்றில்நடம் புரிவார்
ஆயினும்என் அளவின்மிக எளியர்என என்னை
அகம்புணர்ந்தார் புறம்புணர்ந்தார் புறப்புணர்ச்சித் தருணம்
**தூயஒளி பெற்றழியா தோங்குவடி வானேன்**
**சுகமயமாம் அகப்புணர்ச்சி சொல்லுவதெப் படியோ** (5812)

திருஅருட்பா ஆறாம் திருமுறை, பதிகம் எண் - 144, பதிகத்தின் பெயர் - சத்திய அறிவிப்பு

தாயினும்பே ரருளுடையார் என்னுயிரில் கலந்த
தனித்தலைவர் நான்செய்தபெருந் தவத்தாலே கிடைத்தார்
வாயினும்ஓர் மனத்தினும்மா மதியினும்எத் திறத்தும்
மதித்தளத்தற் கருந்துரிய மன்றில்நடம் புரிவார்
ஆயினும்என் அளவின்மிக எளியர்என என்னை
**அகம்புணர்ந்தார் புறம்புணர்ந்தார் புறப்புணர்ச்சித் தருணம்**
**தூயஒளி பெற்றழியா தோங்குவடி வானேன்**
**சுகமயமாம் அகப்புணர்ச்சி சொல்லுவதெப் படியோ** (5816)


This e-book can be downloaded for free from http://www.vallalar.org